15.07.2026

CC.41/2021

PW–1, பாண்டியம்மாள் க/பெ.பூபதிராஜா

(5வது எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)

**1,3,4,5,6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

எங்களுடைய திருமணம் என்னுடைய பெற்றோர்கள் பார்த்து திருமணம் செய்து வைத்த ஒன்றாகும். திருமணம் முடிந்து நாங்கள் கீழதிருமணிக்கம் என்ற ஊரில் குடியிருந்தோம். எனது கணவர் திருமணத்தின் போது பால்கறந்து விற்பனை செய்து வந்தார் நல்ல லாபம் பார்த்து வந்தார். குடும்பமும் சந்தோஷமாக சென்று கொண்டிருந்தது. திருமணமாகி 8 வருடங்கள் சந்தோஷமாக தான் இருந்தோம். அவர் திருமணம் முடிக்கும்போது வீடு கட்டியதில் 1 லட்சம் கடன் இருந்தது. நான் திருமணம் முடிந்து எனது கணவர் காணாமல் போன பின்பு தான் நான் என் பெற்றோர் வீட்டிற்கு வந்தேன். நான் முதலாம் எதிரியை திருமணம் செய்வதற்காக முன்பாக கண்ணன் என்பவரோடு எனக்கு திருமணம் நடைபெற்றது. அதை நீதிமன்றத்தின் மூலமாக விவாகரத்து செய்யாமல் தான் நான் 1ம் எதிரியை திருமணம் செய்தேன் என்றால் சரிதான். நான் 1ம் எதிரியை திருமணம் செய்த பின் எனது முதல் கணவரை நான் பார்த்தது இல்லை. நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போது அதை திருமங்கலத்தில் உள்ள ஒரு வழக்கறிஞரை வைத்து தான் எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். எனக்கு படிக்க தெரியாததால் அந்த புகாரில் என்ன விபரம் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகாரில் நானும் எனது கணவரும் எங்கள் பெற்றோர் வீட்டிற்கு வந்து இருந்தோம் என்று விபரம் எதாவது சொன்னேனா என்றால் அவ்வாறுசொல்லவில்லை. என் அப்பா வீட்டில் இருக்கும்போது என் கணவர், மாமனார், புஷ்பம், காளியப்பன் மற்றும் முருகேஸ்வரி ஆகியோர்கள் என்னை அடித்து துன்புறுத்தி கழுத்தை பிடித்து நெறித்து

வன்கொடுமை செய்தார்கள் என்றால் என் அப்பாவின் வீட்டில் இருக்கும்போது அவர்கள் அவ்வாறு செய்தது இல்லை. நான் முதல் திருமணம் செய்ததை என்னுடைய புகாரிலோ போலிசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நான் முதல் திருமணத்தை வேண்டும் என்றே மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. என்னை வரதட்சணை கேட்டு எதிரிகள் துன்புறுத்தியதாக சொல்லியுள்ளது அனைத்தும் பொய் என்று சொன்னால் சரியல்ல. என்னை நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எனது கணவர் என்னை சிணுக்கோலியால் குத்தி கையில் காயம் ஏற்படுத்திவிட்ட விஷயத்தை நான் புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயமானது எப்போது ஏற்பட்டது என்பது என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அவ்வாறு அவர் உண்மையிலேயே குத்தி காயம் ஏற்படுத்தியிருந்தால் நான் புகாரில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல.

நான் காவல் நிலையத்தில் எத்தனை முறை புகார் கொடுத்தேன் என்றால் 2 முறை புகார் கொடுத்தேன். முதல் முறை பேசி முடித்துவிட்டார்கள் 2 வது முறை வழக்கு பதிவு செய்தார்கள். என் கணவர் 1ம் எதிரி எங்கு போனார் என்று தெரியாமல் நான் டி.ராமநாதபுரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரின்பேரில் போலிசார் உரிய நடவடிக்கை எடுக்காததால் மதுரை உயர் நீதிமன்ற கிளையில் ஆட்கொணர்வு மனு ஒன்றை தாக்கல் செய்தேன். அந்த வழக்கு எண்.HCP (MD).No.1382/2017 அதில் ஆஜர் 1ம் எதிரி கணவர் ஆஜராகி உரிய விளக்கம் கொடுத்ததால் அந்த மனு முடிக்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 21.09.2017ம் தேதியான உத்தரவு நகல் அதுசம்பந்தமானது என்றால் சரிதான். **அது எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.1ம் எதிரி என்னை திருமணம்முடித்து நல்ல செல்வாக்கோடு இருந்த நிலையில் நான் அவருடைய வருவாயிலிருந்து எண்ணற்ற பணத்தை எடுத்து எனது வீட்டிற்கும் எனது ஆடம்பர செலவுக்கும் பயன்படுத்தகொடுத்துவிட்டதனால் அவருக்கு கடன் அதிகம் ஏற்பட்டு அதை கட்ட முடியாது சூழ்நிலைக்கு தள்ளப்பட்டதால் நான் அவரை அழைத்துகொண்டு என்னுடைய பெற்றோர் வீட்டிற்கு நான் வந்துவிட்டேன்

என்றாலும் அங்கும் சமாளிக்க முடியாத நிலையில் அவர் தலைமறைவாகி விட்டதால் கடன் கொடுத்தவர்கள் என்னை நெருக்கடி செய்ததால் நான் அதிலிருந்து தப்பித்துக் கொள்ள 1ம் எதிரியையும் அவருடைய குடும்பத்தார் மீதும் நான் இந்த பொய் புகாரை கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

08.10.2017ம் தேதி 1ம் எதிரியை 2ம் எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்து இதர எதிரிகள்அவரை ஊரை விட்டு ஓடச்செய்துவிட்டார்கள் என்று நான் புகாரில் சொல்லியுள்ளது சரிதான். ஆனால் என் கணவர் காணாமல் போய் உயர்நீதிமன்றத்தில் 21.09.2017ம் தேதி தான் ஆஜராகியிருந்தார். அதன் பின் அவர் மீண்டும் என்னைவிட்டு சென்றுவிட்டதால் அவர் 08.10.2017ம் தேதி 2வது திருமணம் செய்து கொண்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது மாதிரி எந்த நகையோ அல்லது வரதட்சணை கொடுமையோ இல்லை என்றாலும் நான் 1ம் எதிரியின் குடும்பத்தையும் அவரையும் பழி வாங்கவேண்டும் என்பதற்காக இந்த பொய் புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் புகாரிலும் போலிசார் விசாரணையிலும் 1ம் எதிரியான எனது கணவர் காணாமல் போன விஷயம் குறித்து டி.ராமநாதபுரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரத்தையும் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவையும் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த விபரத்தை சொல்லியிருந்தால் இந்த வழக்கே பதிவு செய்யப்பட்டிருக்காது என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி செய்கைகளும் எதிரிகளால் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் 1ம் எதிரிக்கும் 2ம் எதிரிக்கும் திருமணம் நடைபெற்றதாக சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல.

1,3,4,5,6 எதிரிகளின் குறுக்கு விசாரணையை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**மறுவிசாரணை**. இல்லை

15.07.2026

CC.41/2021

PW–2, பால்ராஜ் த/பெ.ராமசாமி

(5வது எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)

**1,3,4,5,6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

என் மகளுக்கு ஏற்கனவே கண்ணன் என்பவரோடு திருமணம் நடைபெற்றதை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் எனது மகள் வீட்டிற்கு எத்தனை முறை போனேன் என்றால் சிலமுறை சென்றிருக்கிறேன். எனது வீட்டில் வந்து எனது மகளும் 1ம் எதிரியான எனது மருமகனும் சுமார் 6 மாத காலம் எங்களோடு தங்கியிருந்தார்கள். அந்த விபரத்தையும் நான்போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது மகளோடு எனது மருமகன் எனது வீட்டிற்கு வந்தாரா  என்றால் ஆமாம், என் மகள் மட்டும் தனியாக வந்தார். நான் எனதுமகளுக்கு திருமணத்திற்காக 20 பவுன் செயின், மாப்பிள்ளைக்கு 2 பவுன் செயின், 1பவுன் மோதிரம், திருமண செலவுக்கு 50 ஆயிரம் கொடுத்தது பொய் என்றால் அது உண்மை. அவ்வாறுபோட்டதாக சொல்லி அனைத்து நகைகளையும் நானே வைத்து கொண்டேன் என்றால் அது உண்மை இல்லை. 1ம் எதிரிக்கும் 2ம் எதிரிக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்ற தேதியோ அல்லது அதற்கு ஆதாரங்களோ எதாவது நீதிமன்றத்திலோ அல்லது காவல் நிலையத்திலோ கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. அந்த மாதிரி எவ்வித திருமணமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனது மருமகன் காணாமல் போய் எப்போது நான் டி.ராமநாதபுரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் 2016க்கு மேல் காணாமல் போய்விட்டார் என்று புகார் கொடுத்தேன். 2017ம் அன்று உயர்நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்தேன். அங்கு 1ம் எதிரி ஆஜரானார். என்னுடைய மருமகன் பால்வியாபாரம் செய்து நல்ல

நிலையில் இருந்த போதுஅவருடைய வருவாய்களை என்னுடைய மகள் அவருக்கு தெரியாமல் எடுத்து எங்களுக்கும் அவருடைய ஆடம்பர செலவுக்கும் வைத்து கொண்டாா என்று சொன்னால் அது பொய். அந்த கடன்களை கட்டமுடியாமல் தலைமறைவானதால் என்னுடைய மகளை கடன் கொடுத்தவர்கள் தேடி வந்தநிலையில் அதிலிருந்து தப்பிப்பதற்காக என் மகள் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1,3,4,5,6 எதிரிகளின் குறுக்கு விசாரணையை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**மறுவிசாரணை**. இல்லை

15.07.2026

CC.41/2021

PW–3, லட்சுமி க/பெ.பால்ராஜ்

(5வது எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)

**1,3,4,5,6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

எனது மகளுக்கு ஏற்கனவே திருமணம் நடைபெற்ற விபரத்தை போலிசார் விசாரணையில் நாங்கள் சொல்லிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். என் மகளும் 1ம் எதிரியான எனது மருமகனும் எந்த காலத்திலும் எங்கள் வீட்டிற்கு வந்து குடியிருக்கவில்லை. என்னுடைய மகளும் 1ம் எதிரியும் எங்கள் வீட்டிற்கு வந்து குடியிருந்த போது இதர எதிரிகள் வந்து அடித்து கழுத்தை நெறித்ததாகவும் நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. நான் 1ம் எதிரிக்கும் 2ம் எதிரிக்கும் திருமணம் நடந்த விஷயம் நேரடியாக தெரியாது. எனது மருமகன் காணாமல் போனது விஷயமாக டி.ராமநாதபுரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த மற்றும் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்த விபரத்தையும் எனது விசாரணையில் சொன்னேன். நான் சொன்னது மாதிரி எந்த விஷயமும் நடைபெறவில்லை என்றாலும் எனது மகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1,3,4,5,6 எதிரிகளின் குறுக்கு விசாரணையை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**மறுவிசாரணை**. இல்லை